**MCOP NO: 3683/2021 DATE: 16.04.2026**

ம.சா : 3

பெயர் : திரு.கிருஷ்ணன்

த/பெ : திரு.சாரங்கன்

வயது : 65

**<u>மசா3 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த போது 108 ஆம்புலன்ஸிற்கு நான் கைப்பேசி மூலம் அழைத்தேனா என்றால் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் லாரிக்கும் எனக்கும் எவ்வளவு இடைவெளி இருந்தது என்றால் 100 மீ இருந்தது. விபத்து சமயத்தில் கூடுவாஞ்சேரியிலிருந்து தாம்பரம் நோக்கி செல்லும் சாலையில் வலது புறமாக சென்று கொண்டிருந்தேன். லாரி தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு நோக்கி வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். நானும், காயம் பட்ட நபரும் சர்வீஸ் சாலையில் தான் நடந்து சென்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான். விபத்து நடந்த காலத்தில் ஆன்ட்ராய்டு கைப்பேசி வைத்திருந்தேன். விபத்து நடந்த இடத்தில் நான் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு Google Activity சம்பந்தப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், நான் விபத்து நடந்த இடத்தில் இருந்திருந்தால் அதை தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரருக்காக பார்க்காத விபத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு சம்பந்தமான லாரியானது தாம்பரம் – செங்கல்பட்டு சாலையில் எங்களுக்கு இடது புறமாக சென்று கொண்டிருந்தது. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.